கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.
அ.வ.எண்.198/2021
நாள்.10.12.2024

2024ம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) செல்வி. P. அஞ்சலிதேவி, உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================================

| | |
|---|---|
| பெயர் = பொன்னம்மாள் | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = |

==========================================================================

**PW2 மு.வி**

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது தகப்பனார் பெயர் பெரியசாமி. எனது தாயார் பெயர் கருப்பாயி. எனது தகப்பனார் பெரியசாமிக்கு ராமர், பொன்னம்மாள், சின்னம்மாள், கோவிந்தம்மாள், ரெத்தினம் ஆகியோர் ஆவார்கள். எனது தகப்பனார் பெரியசாமிக்கு நிலம் மற்றும் வீடு ஆகிய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். ராமர் வெளியில் இருந்து தற்போது தான் தாவா கிராமத்திற்கு வந்துள்ளார். தற்போது ராமர் இலால்குடியில் குடியிருந்து வருகிறார். எனது தகப்பனாரின் சொத்துக்களை ரெத்தினம் தான் அனுபவம் செய்து பராமரித்து வந்தார். ரெத்தினம் தற்போது உயிருடன் இல்லை இறந்துவிட்டார். தற்போது எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ரெத்தினத்தின் மனைவி பழனியம்மாள் தான் பராமரித்து வருகிறார். எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் எதுவும் பிரிக்கப்படவில்லை.

வழக்கு குறுக்கு விசாரணைக்காக 08.01.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.